# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2269 - 2022 පෙබරවාරි මස 25 වැනි සිකුරාදා - 2022.02.25

*2269ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | *86* |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | *88* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2022, மாச்சு மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, மாச்சு மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்காணி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

85- B 082319 - 353 (2022/02)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

இணைப்பு -09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான (104 ஆம் பிரிவு) தொடர்பிலான அறிவித்தல்

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் பொல்பிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர், பிரதிக் காணி ஆணையாளர் டீ. எம். எஸ். தசனாயக ஆகிய நான், காணி அபிவிருத்தி காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட் பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1979, செத்தெம்பர் 21 ஆந் திகதி சமர்ப்பித்த இல. எல்.எஸ்-கு 24 தாங்கிய அனுமதிப்பத்திர உரிமையாளர் ஆகிய கொடதெனிய, தம்பிவத்தையில் வசிக்கும் தொன் ஜோன் விஜேசிங்க ஜயவர்தன அவர்களுக்கு வழங்கப்பட்ட குருநாகல் மாவட்ட பதிவாளர் திணைக்களத்தின் இல. பீ 558-129 இன் கீழ் 1979, ஒற்றோபர் 26 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு அடுத்துறுபவரொருவரின் நியமனம் பெறுவதற்கு சட்ட ரீதியாக ஒருவர் இல்லாதமை காரணமாகவோ அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் அடுத்துறுபவரொருவராக இருப்பதற்கு விரும்பாமை காரணமாக அடுத்துறுபவரொருவராக நியமிப்பதற்கு ஒருவர் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளதன் காரணமாக அதன் அனுமதிப்பத்திரம் மேற்குறிப்பிட்ட சட்டமூலம் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இதன் மூலம் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அதை 2022.03.18 ஆந் திகதிக்கு முன்னர் அறியத்தர வேண்டும்.

### அட்டவணை

குருநாகல் நிர்வாக மாவட்டத்தின் பொல்பிதிகம பிரதேச செயலக பிரிவின் ஹிரியால ஹத் பத்துவ- கோரளே 336 கல்டெங்வெவ கிராம அலுவலர் பிரிவில் கெலேவெவ என்ற பெயருடைய கிராமத்தில் அமைந்துள்ளதுடன், அளவையாளர் தலைமையதிபதியின் பொறுப்பில் உள்ள மற்றும் அளவையாளர் தலைமையதிபதி மூலம் தொகுக்கப்பட்டுள்ள இலக்கம் அ.க.பி. 1996 உடைய காணி காணி உடைத்தல் - அளவையாளர் தலைமையதிபதி மூலம் தொகுக்கப்பட்ட இலக்கம் 51-67 உடைய கோடுகள் குறிப்பு இல.5 மற்றும் 10 ஐ உடைய காணித்துண்டாக குறிக்கப்பட்டுள்ள இதன் விஸ்தீரணம் 47 ஏக்கர் 02 றூட் 39 பேர்ச் விசாலமானதுடன், கீழ்க் குறிப்பிட்ட படி எல்லைகள் அமைந்த அரசாங்க காணி.

காணித்துண்டு இல. 5 இற்கான எல்லை.-

வடக்கு : மிரிகன்பிடிகம கிராம எல்லை;
கிழக்கு : அ.க.பி.1996 இன் இலக்கம் 7 மற்றும் 9 இன் காணித் தொகுதி;
தெற்கு : அ.க.பி.1996 இன் இலக்கம் 7 இன் காணி தொகுதி;
மேற்கு : அ.க.பி.1996 இன் இலக்கம் 9,4,3 மற்றும் 2 இன் காணித் தொகுதி.

காணித்துண்டு இல. 10 இற்கான எல்லை.-

வடக்கு :அ.க.பி.1996 இன் இலக்கம் 9 இன் காணி தொகுதி;
கிழக்கு : அ.க.பி.1996 இன் இலக்கம் 11 இன் காணி தொகுதி;
தெற்கு : அ.க.பி.1996 இன் இலக்கம் 9 இன் காணி தொகுதி;
மேற்கு : அ.க.பி.1996 இன் இலக்கம் 11 மற்றும் 1 காணி தொகுதி.

டீ.எம்.எஸ். திசாநாயக்க,
பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்,
(மாகாணங்களுக்கிடையிலான)

பிரதேச செயலகம்,
பொல்பிதிகம,
2021.10.27.

02-280

இணைப்பு -09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான (104 ஆம் பிரிவு) அறிவித்தல்

தென் மாகாண சபையின், அம்பாந்தோட்டை மாவட்டம் வலஸ்முல்லை பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளரான இந்திக்க ருவன் குமார விதாரண ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட் பிரிவின் கீழ் அதி மேதகு சனாதிபதி அவர்களினால் 2004.06.07 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இல. ஹம்/8/பிர 57026 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான கலஹிட்டிய என்னும் முகவரியில் வசிக்கும் செனரத் பதிரணகே தொன் கரோலிஸ் என்பவருக்கு இல.1001 இன்கீழ் 2004.10.29 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிக்கு பின்னுரித்தினைப் பெற்றுக் கொள்வதற்கு சட்டரீதியான உரித்துடைய ஒருவர் இல்லாத காரணத்தினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தாலும் அவர் அடுத்துரையாளராக இருப்பதற்கு விரும்பாத காரணத்தினால் பின்னுரித்து பெறுவதற்கு ஒருவரும் சமுகமளிக்காததாக அறிக்கையிடப்பட்டுள்ளதால் குறித்த அளிப்புப் பத்திரம் மேற்படி சட்டத்தின் 104ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.03.18 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

அம்பாந்தோட்டை மாவட்டம், தற்போது வலஸ்முல்ல பிரதேச செயலாளர் பிரிவிற்குரிய வடக்கு கிருவா பற்றுவில், வலஸ்முல்ல பஹல கிராம அலுவலர் பிரிவில், இறுதி கிராம வரைபட இல. 163 துண்டு இல. 459 எனக் காட்டப்பட்ட 0.042 ஹெக்டயார் விஸ்தீரணமான துனுமடலாவஹேன எனும் அரசாங்க காணித்துண்டு

வடக்கு : துண்டு இல. 449;
கிழக்கு : துண்டு இல. 479;
தெற்கு : துண்டு இல. 466;
மேற்கு : துண்டு இல. 458.

ஐ. ஆர்.கே. விதாரண,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
வலஸ்முல்ல,
2021.05.13.

02-274

---

இணைப்பு -09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள இராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் பிஹிலிஎலே கெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1982ஆம் ஆண்டு பங்குனி(3) மாதம் இருபத்தொன்பதாம் திகதி வழங்கப்பட்டுள்ள அநு/பிர/ 1210 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான இராஜாங்கனை யாய 12 எனும் முகவரியில் வசிக்கும் சித்திரனைதலாகே ஹென்திரிக்ஹாமி என்பவருக்கு கையளிக்கப்பட்டு அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1982.06.10 ஆந் திகதி 1211 ஆம் இலக்க பதிவேட்டின் மே/ நுப/ 1/ 1210 ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தினால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லையென அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஆட்சேபனை இருந்தால் அவற்றை 2022.03.18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தில் மேற்கு நுவரகம் பலாத் பிரதேச செயலாளர் பிரிவின், ------ கோரளையிலுள்ள 5 ஏ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த இராஜாங்கன யாய 12 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட அவரின் பொறுப்பில் உள்ள ----------- ஆம் இலக்க வெளிக்களத்தாளின் பிரகாரம் இலக்கம் இரு.கு.வ. 21 உரிய திட்ட இலக்கம் 03 துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 00ஏக். 02றூட். 01பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரசாங்க காணி, இதன் எல்லைகள் வருமாறு.-

வடக்கு : பாதையும் 2 இன்பகுதியும் ;
கிழக்கு : இலக்கம் 4 காணித்துண்டு;
தெற்கு : இலக்கம் 35 காணித்துண்டும் 36 இன் பகுதியும்;
மேற்கு : இலக்கம் 2 காணித்துண்டின்பகுதியும் 36 இன் பகுதியும்.

பீ. ஜீ. சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2021.11.22.

02-273

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/68367.
பிரதிக் காணி ஆணையாளரின் (அம்பாறை) இல. : 11/அம்/இகொ/இ/மிஹி/வாணிஜ/26.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாறை மாவட்டம், அம்பாறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மிஹிந்துபுர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மிஹிந்துபுர எனும் கிராமத்தில் அமைந்துள்ள 280009 வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு இலக்கம் 14 மற்றும் 0.8060 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரசாங்க காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு திரு. புளத்சிங்கள ஹெட்டிகே சுரங்க என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : PP/ அம்/ 1174 இல் காணித்துண்டு இலக்கங்கள் 11,10,09, 08,15;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 15;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 15;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 15 மற்றும் PP/ அம்/ 1174.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**-முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் அனுமதி வழங்கிய 2021.12.10ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- 2021 ஆம் ஆண்டுக்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 5 மில்லியனுக்குக் குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2% குத்தகை 2020 ஆம் வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா 5 மில்லியனுக்கு அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுக்கப்படல் வேண்டும். இந்தக் குத்தகைப் பணம் 5 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் 5 வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20 % கூட்டி வருடாந்தக் குத்தகையாகக் கொடுக்கப்படல் வேண்டும்.

தவணைப் பணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளர்/ மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்பதியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் நிறைவு பெறும் வரை கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் மட்டுமே அனுமதிக்கப்படும்;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

சமீர பி. ஹெட்டிஆரச்சி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.02.01.

02- 272

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/67820.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : என்சிபி/பிஎல்சி/எல்/09/01/18/04 .

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், ரம்பாவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 16 கதுருகஸ்தமன கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கதுருகஸ்தமன எனும் கிராமத்தில் அமைந்துள்ள காணி அலுவலரினால் வரையப்பட்ட மதிப்பளவான சுவடு வரைப்படத்தில் காட்டப்பட்டுள்ள 04 ஏக்கர் 01றூட் 30.38 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான காணியை விவசாய நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு திருமதி உமகிலியகே நயனா பிரியங்கனி விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : கதுருகஸ்தமன அரச காடு;
கிழக்கு : கதுருகஸ்தமன அரச காடு;
தெற்கு : சதுப்புப் பாதை மற்றும் அரச காடு;
மேற்கு : பரம்பரைச் சேனைக் காணி மற்றும் அரச காடு.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது வருடங்கள் (30) (2021.11.01ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- 2021 ஆம் ஆண்டுக்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூ.5, 000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியில் 2% மாண்புமிகு அமைச்சர் அனுமதித்த வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூ.5,000,000) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபட வேண்டும். இந்தக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்படும் குத்தகைப் பணத்தின் 20% வட்டி வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தண்டணைப் பணம் : தவணைப்பணம் அறிவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின்/ மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்பதியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் , மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும் ;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2021.11.01 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப்பட மாட்டாது அதன் பின்பும் இந்தக் குத்தகை பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் மட்டுமே அனுமதிக்கப்படும்;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக் குத்தகை வழங்கப்படும்.

ஏ.கே. ஏ. செவ்வந்தி அமரசேகர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.02.18.

02- 260

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.